**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**
**ஆத்தூர்**
**------**
**அசல் வழக்கு எண்.2/2021**

**2026 ஆம்** வருடம் பிப்ரவரி மாதம் 12 ஆம் நாள் பிரதிவாதி தரப்பு சாட்சியான பி.வா.சா.1-இன் வாக்குமூலம் 1873ம் வருடத்திய 10வது விதியின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜோசப் ஜான் பிரிட்டோ | ஜாதி | : | |
| த.பெ | : | மரியசூசை | தொழில் | : | விவசாய கூலி வேலை |
| கிராமம் | : | பஞ்சம்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 57/2026 |
| தேதி | : | 12.02.2026 | | | |

**2ம் வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நீங்கள் தாக்கல் செய்த சத்திய பிரமாண வாக்குமூலத்தில் பாரா 2ல் இறந்துபோன உங்கள் பாட்டனார் இருதயம் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை தன் இரு மகன்களான அந்தோணி, மரியசூசைக்கு மட்டும் பிரித்துக்கொடுத்துவிட்டு கடந்த 1958 ல் இறந்துபோனார் என்று கூறியுள்ளீர்கள் என்றால் சரிதான். ஆனால் நீங்கள் தாக்கல் செய்துள்ள எதிர் உரையில் மேற்சொன்ன சங்கதிகளை நீங்கள் கூறவில்லை என்றால் சரியல்ல. நீங்கள் சொல்வது போல் மேற்சொன்ன சங்கதிகளை எதிர்உரையில் கூறவில்லை என்றால் சரியல்ல. அதேபோல அந்தோணி, மரியசூசைக்கு பிரித்துக்கொடுத்ததாக சொல்லப்படுவதற்கு பின்னிட்டு பிரித்து கொடுக்கப்பட்ட சொத்துக்கள் உங்கள் அனுபவத்திலும், உங்கள் பெரியப்பா அந்தோணி அனுபவத்தில் மட்டுமே உள்ளது என்பதற்கு ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. நீங்கள் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் மேற்சொன்ன அனுபவத்திற்கான ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் சரியல்ல.

உங்கள் பாட்டனார் இறக்கும்போது உங்கள் தந்தைக்கு 10 வயது என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. உங்கள் தந்தை எந்த வருடம் இறந்தார் என்றால் 1969 ல் இறந்தார். 1969 ல் உங்கள் தந்தை இறக்கும்போது அவருக்கு 21 வயது என்றால் சரிதான். அப்பொழுது உங்களுக்கு 2 வயது என்றால் சரிதான். 1958 ல் இருந்து UDR காலங்கள் வரை தாவா சொத்துக்கள் அந்தோணி பெயரிலும், உங்கள் அம்மா 9ம் பிரதிவாதியான சம்மனசு அம்மா பெயரிலும் இல்லை என்றால் சரிதான். உங்களுடைய முதல் விசாரணையில் 1ம் வாதி வேலையின்றி அவருடைய தாயாரான செசிலியம்மாளுடன் வசித்து வந்ததால் அவருக்கும் ஒரு பங்கை ஒதுக்கச் சொல்லி

உங்கள் பெரியப்பாவிடம் தகறாறு செய்தார் என்று கூறியுள்ளீர்கள் என்றால் சரிதான். 1969 ல் உங்கள் அப்பா இறந்துபோனதால் அப்போது 2 வயதான உங்களுக்கும், 3 வயதான உங்கள் அக்கா சகாய இருதயமேரி வளர்ப்பிக்காகவும் உங்கள் தந்தை இறந்த 40 நாளில் ஒரு ஊர் பஞ்சாயத்து நடந்தது என்றால் சரிதான். அதன் அடிப்படையில் ஏற்பட்ட ஒரு பஞ்சாயத்து முச்சலிக்காவில் (வா.சா.ஆ.17) A அட்டவணை சொத்தில் ரோட்டின் வடபுறம் உள்ள 1 ஏக்கர் 80 செண்ட்டும், B, C அட்டவணை சொத்துக்களில் ரோட்டின் தென்புறம் உள்ள 1 ஏக்கர் 70 செண்ட் உங்களுடைய பெரியப்பாவுக்கும், 9 முதல் 11 பிரதிவாதிகளுக்கும் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.

வா.சா.ஆ.17 ன் அசலை பி.வா.சா.ஆ.4 ஆக தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4 ஆவணம் பதியப்படவும் இல்லை, அதன்படி பட்டா ஏற்படவில்லை என்றால் பதியவில்லை என்பது சரிதான், ஆனால் பட்டா ஏற்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் 12வது பிரதிவாதி மரியபுஷ்பமும், 13 வது பிரதிவாதியின் தாயார் சந்தியாகுஅம்மாளும் தரப்பினர்களாகவும் இல்லை, சாட்சிகளாகவும் இல்லை என்றால் சரிதான். அவர்களுக்கு திருமணம் ஆகிவிட்டதால் சீர்வரிசை செய்ததால் சேர்க்கவில்லை. உங்களுடைய எதிர்உரையில் பக்கம் 2 ல் மேற்சொன்ன மரியபுஷ்பம், சந்தியாகுஅம்மாள் ஆகியோர் இருதயத்தின் வாரிசுகள் என்று சொல்லியுள்ளீர்கள் என்றால் சரிதான். அவர்களை சேர்க்காததால் வாதியின் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்று கூறியுள்ளீர்கள் என்றால் சரிதான். அதன்பின்பு தான் 12 மற்றும் 13 வது பிரதிவாதிகள் வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றால் சரிதான்.

1வது வாதி திருமணம் செய்யாமல் இருந்ததாலும், அப்போது குழந்தைகளாக இருந்த உங்களது பராமரிப்பிற்காகவும் கிராம வழக்கப்படி ஏற்பட்ட ஒரு இடைக்கால ஏற்பாடு என்பதால் தான் 12 மற்றும் 13 வது பிரதிவாதியின் தாயாரை பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. பாகவிஸ்தி எழுதப்பட்ட விபரம் உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். ஊர் பெரியவர்களுக்கு தான் தெரியும். உங்கள் பாட்டி செசிலியம்மாள் B, C அட்டவணை சொத்துக்களில் சர்வே எண்.444/3 03.11.1973 அன்று அமலோற்பவம் என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 1 1/4 செண்ட்டை மட்டும் கிரையம் கொடுத்துள்ளார். அது சம்மந்தமாக உங்கள் தாயாரோ நீங்களோ மேற்சொன்ன கிரையத்தை ஆட்சேபணை செய்யவில்லை என்றால் அதே 1 1/4 செண்ட்டை அவர்களிடம் இருந்து தண்ணி போகும் வாய்க்காலுக்காக என் பாட்டியே பெற்றுவிட்டார். அதனால் நாங்கள் ஆட்சேபணை செய்யவில்லை.

A அட்டவணை சொத்துக்களை பாகமாக பெற்ற செசிலியம்மாள் B அட்டவணை சொத்துக்களை கிரையம் கொடுத்துள்ளதற்கும் உங்கள் தாயார் கையொப்பம்

செய்யாததற்கும் காரணம் என்ன என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. B அட்டவணை சொத்து ஏற்கனவே பாட்டி பெயரில் இருந்ததால் கிரையம் கொடுத்துள்ளார்கள். பி.வா.சா.ஆ.4 ஆவணம் இடைக்கால ஏற்பாடு தான் என்றும், முழு சொத்துக்களையும் செசிலியம்மாள் தான் நிர்வகித்து வந்தார் என்றால் சரிதான். தாவா சொத்தான சர்வே எண்.165/2B ல் 80 செண்ட்டை உங்கள் தாயாரிடம் இருந்து 07.07.2010 அன்று ஒரு தான செட்டில்மெண்ட் மூலம் பெற்றுள்ளீர்கள் என்றால் சரிதான்.

உங்களிடம் காட்டப்படும் தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் பக்கம் 2ல் எனது கணவர் வழி பாத்தியமானதும், 20.10.1967 தேதியில் எனது கணவரும் அவரது சகோதரர்களும் கிரையம் பெற்ற சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவண நகல் **(வா.சா.ஆ.21/DW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பி.வா.சா.ஆ. 4 ஆவணத்தில் A அட்டவணை சொத்தில் உள்ள வீட்டை உங்கள் பாட்டி தன் மூத்த மகன் அந்தோணிக்கு தானம் கொடுத்து அவர் அதை விசுவாசம் மகன் அந்தோணிக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அது உங்கள் சம்மதமின்றியும், உங்கள் தாயார் சம்மதமின்றியும் கிரையம் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

பொது குடும்ப கடனை கட்டுவதற்கு உங்கள் தாயார் முன்வராததால் தன் மூத்த மகன் அந்தோணிக்கு தானமாக கொடுத்து அந்த பொது கடனை கட்டிக்கொள்ள அறிவுறுத்தியிருந்தார் என்றால் சரியல்ல. செசிலியம்மாள் தானம் கொடுத்த சொத்து சம்மந்தமாக உங்கள் தாயாரோ, நீங்களோ இதுவரை ஆட்சேபணை செய்யவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ. 4 ல் உள்ள B, C அட்டவணையில் உள்ளதும், பிராதில் உள்ள A அட்டவணை சொத்தை உங்கள் தாயாரும், உங்கள் பெரியப்பாவும் 1 ம் வாதிக்கு லோன் வாங்கி வீடு கட்டி குடியிருக்க எழுதிக்கொடுக்கப்பட்ட ஒரு ஆதரவு ஆவணம் தான் என்றால் லோன் வாங்குவதற்காக இல்லை, நிலம் எங்களிடம் வந்ததால் வீடு கட்டிக்கொள்ள கொடுக்கப்பட்டுள்ளது.

அந்த சமயத்தில் வீடு மட்டும் எனக்கு போதும் என்றும், தோட்டம் எனக்கு வேண்டாம் என்று விட்டுக்கொடுத்ததாக 1979 ல் எந்த ஆவணமும் இல்லை என்றால் சரிதான். 1958 ல் இருந்து 1975 வரை பாட்டி செசிலியம்மாள் தான் மேற்படி சொத்துக்களின் பாதுகாவலராக இருந்து வந்தார் என்றும், அதனால் தான் பி.வா.சா.ஆ. 4 க்கு விரோதமாக பல கிரையங்களிலும், தானங்களிலும் அவரே ஈடுபட்டார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.17 ஆவணத்தில் 1ம் வாதியின் பெயர் சிறுமணிஅம்மாள் என்று உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ. 4 ஆவணத்தில் I. Jermane என்று கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். அவர் படிக்கும் காலத்தில் J என்ற ஆங்கில எழுத்துடன் துவக்கி கையொப்பம் செய்தார் என்றும்,

அவர் அரசு பணிக்கு சென்ற பிறகு G என்ற ஆங்கில எழுத்துடன் துவக்கி கையொப்பம் செய்துகொண்டார் என்றால் சரியல்ல.

1ம் வாதியின் Union bank, SBI, மற்றும் post office கணக்குகளில் I. Germane என்று தான் உள்ளது என்றும், எனவே பி.வா.சா.ஆ. 4ல் உள்ள 1ம் வாதியின் கையெழுத்தும், வா.சா.ஆ.19 ஆன உயிலில் உள்ள 1ம் வாதியின் கையெழுத்தும் ஒரே நபரால் தான் போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்காக நீங்கள் ஒரே நபரின் கையெழுத்து இல்லை என்று சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. 1ம் வாதி மதுரையில் தங்கி 2ம் வாதியை படிக்க வைத்துக்கொண்டிருந்ததால் அவரது post office கணக்குகளில் மதுரை விசாலம் சொல்லப்பட்டுள்ளது என்றும், ஆனால் வாதிகள் மதுரையில் தங்கவில்லை என்று வீண் கட்சி செய்கிறீர்கள் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

வா.சா.ஆ.21 ல் மொத்தம் எத்தனை சொத்துக்கள் எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது என்றால் 5 சர்வே எண்கள் எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது. பூர்வீக சொத்தும், என் அப்பா கிரையம் வாங்கிய சொத்தும் சேர்த்து எழுதிக்கொடுக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

வா.சா.ஆ.21 ல் உள்ள சொத்துக்கள் பூர்வீக சொத்து என்று நீங்கள் கூறும் நிலையில் அந்த ஆவணத்தில் உங்கள் பெரியப்பாவும், உங்கள் சகோதரியும் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். எங்கள் பெயரில் தனி பட்டா ஏற்பட்டதால் அவர்களை சேர்க்கவில்லை.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor